*செய்தி வெளியீடு எண்: 07* *நாள்:02.10.2019*

**தேனி மாவட்டம்**
**நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டினை தவிர்ப்பது குறித்து**
**உத்தமபாளையம் பேருந்து நிலையத்தில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**கடைகளில் ஆய்வு மேற்கொண்டு, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.**
******

தேனி மாவட்டம், உத்தமபாளையம் பேருந்து நிலையத்தில் இன்று (02.10.2019) நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டினை தவிர்ப்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கடைகளில் ஆய்வு மேற்கொண்டு, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி தெரிவித்ததாவது:-

தமிழக அரசு நெகிழி (பிளாஸ்டிக்) மாசில்லா தமிழ்நாடாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், பொது மக்களும், வியாபாரிகளும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப் பைகள், காகித உறைகள் போன்ற பொருட்களைப் பயன்படுத்த பழகிக் கொள்ள ஏதுவாக, பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடைகளை கடந்த 2019, ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான அவசியத்தையும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் மற்றும் அதற்கு மாற்று பொருட்கள் பயன்படுத்துவது குறித்தும் மாவட்டம் முழுவதும் பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தூய்மையான தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்றால் ஒரு முறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் நாம் தவிர்த்திட வேண்டும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப் பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரமான வாழ்க்கையை நாமும், நமது எதிர்கால சந்ததியினரும் அடைய முடியும்.

மேலும், தூய்மையே சேவை என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பிளாஸ்டிக் பயன்பாட்டினை பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் முற்றிலும் தவிர்ப்பது குறித்து இன்றைய தினம் உத்தமபாளையம் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் ஆய்வு மேற்கொண்டு, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பிளாஸ்டிக் பொருட்களினால், பொதுமக்களுக்கு பல்வேறு இன்னல்களும், சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றது என்பதனை கருத்தில் கொண்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும், பல்வேறு நடவடிக்கைகளுக்கு, வியாபாரிகளும், பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) நா.விஜயலட்சுமி, வட்டாட்சியர் பெ.உதயராணி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***